**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
**OS No: 65/2014**

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ம் நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**பிசா1 (விஸ்வநாதன்). நாள் 14.10.2025**

**குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)**

வாதி எனது இளைய சகோதரி என்றால் சரி. 1 ம் பிரதிவாதி என் தகப்பனார். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் என் மூத்த சகோதரிகள். வாதிக்கு 23.06.1989 ல் (வாசாஆ 10)திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்துள்ள 1972 ம் பாகக் கறார் ஆவணத்தை பற்றி தெரிந்து கொண்டேன். மேற்படி ஆவணத்தின் அசல் ஆவணம் என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ 1 ஆவணத்தில் பிதுராஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்து தான் பாகப்பிரிவினை செய்து கொண்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 9 தான செட்டில்மெணட் ஆவணத்தை 1,2,3 பிரதிவாதிகள் எழுதி கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 1972 ம் பாகப்பிரிவினை ஆவணத்தின் படி பாத்தியம் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பெருந்துறை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நடந்து சாமியாத்தாளுக்கு 1/5 பாகமும் மற்றவர்களுக்கும் பாத்தியம் இருப்பதாகவும் அந்த பாகத்தை செட்டில்மேண்ட் ஏற்படுத்துவதாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. வாசாஆ 9 ஆவணத்தில் எங்களில் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகின்ற சொத்தை செட்டில்மெணட் ஏற்படுத்துவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 1 மற்றும் 9 ஐ நான் மறுக்கவில்லை. அதிலுள்ள வாசகங்கள் சரியானவை தான். வாசாஆ 9 ல் சாமியாத்தாளுக்கு 1/5 பாகம் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம், அசாஆ 9ன் அசல் என்னிடம் தான் உள்ளது. வாசாஆ 9 நடைமுறை படுத்தப்பட்டுவிட்டது. தாவாவில் உள்ள சொதது விவரம் தான் வாசாஆ 9ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாமியாத்தாளுக்கு சொத்தில் 1/5 பாகம் உள்ளது என்றால் சரிதான். வாதிக்கு அவரது 1/5 பாகத்தை கொடுப்பதில்

ஆட்சேபணை உள்ளதா என்றால் உள்ளது. வாசாஆ 9ன் அடிப்படையில் எனக்கு தாவா சொத்தில் 4/5 பாகம் உள்ளதை வாதி மறுக்கவில்லை என்றால் அதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. நான் தாவா சொத்தில் வாதிக்கு உள்ள பாத்தியதையை வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கு முன்பிருந்து வாதிக்கும் எனக்கு போக்குவரத்து இல்லை. பங்கு கேட்டதால் போக்குவரத்து இல்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் படுத்த படுக்கையாக உள்ளார் என்பதை நான் எழுதிப் போடவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் திடகாத்திரமாக உள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் என் தகப்பனாருக்கோ, எனது மூத்த சகோதரிகளுக்கோ எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. 2,3 பிரதிவாதிகளுக்கு சொத்தில் பாத்தியம் இல்லாத நிலையில் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்த ஆவணத்தை ஏற்றுக் கொண்ட நிலையில் வாதிக்கு வேண்டுமேன்றே தாவா சொத்தில் உள்ள பாகத்தை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என் சகோதரிகள் எழுதிக் கொடுத்த தான செட்டில்மேண்ட்டின் செல்லும் தன்மை மற்றும் அதை மறுத்து நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து விவரம் சரியானது தான். தாவா சொத்து விவரத்தில் 2ம் அயிட்டத்தில் 2ம் இனமாக காண்பிக்கப்பட்டுள்ள வீட்டில் தான் நான் குடியிருந்து வருகிறேன். அந்த வீட்டு சொத்து விவரம் செக்குபந்தி விவரம் சரியானது தான். அதன் விஸ்தீரணம் 1280 என்றால் வீஸ்தீரணம் பற்றி தெரியாது, அது மூனேகால் செண்ட் என்றால் சரி. வீட்டின் கதவு எண் 11/20 என்றால் சரிதான். என் மகன் பெயர் கார்த்திகேயன். செக்குபந்தியில் சொல்லியுள்ள நாச்சிமுத்து வின் கிழபுறம் உள்ள சொத்தை நான் கிரயம் பெற்றுள்ளேன். அந்த சொத்தை என் மகன் பெயரில் கிரயம் பெற்றுள்ளேன். அந்த அசல் ஆவணம் என்னிடம் தான் உள்ளது. அந்த சொத்தை என் மகனுக்கு குணசேகர் விற்பனை செய்தார். அந்த சொத்ததின் கிரய ஆவணத்தில் ரங்கசாமி கவுண்டர் நிலத்தின் கிழக்கில் உள்ள சொத்தை விற்பனை செய்வதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மகன் பெயரில் கிரயம் ஏற்படுத்திக் கொடுத்த சொத்தின் மூல ஆவணம்தான் என்னிடம் காண்பிக்கப்படுவது. அது **வாசாஆ 11.** எனது வீட்டிற்கு மேற்கே குமாரசாமியின் நிலம் உள்ளது என்றால் சரிதான். எனது வீடு நடுவிலும், என் மகன் பெற்ற நிலம் கிழக்கிலும் குமாரசாமியின்

நிலம் மேற்கிலும் உள்ளது என்றால் சரி. வெகு காலமாக நான் , குமாரசாமி மற்றும் சித்தப்பாவிற்கு கிழக்கே என வாய்மொழியாக பிரித்து கட்டிடங்கள் கட்டி அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். நான் அனுபவித்து வரும் நடுவில் உள்ள பங்கை நான் எனது சொந்த செலவில் கட்டிடங்கள் எழுப்பியுள்ளேன்.

( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது )

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.10.14 17:56:24 -0300

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS